அபிராமிப்பட்டர் அருளிய

## அபிராமி அந்தாதி

# அங்குறள்

## இரத்தின சுருக்கவுரை



தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூன்முகம்

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

பிரபஞ்ச இயக்கத்தில் ஆதியும் அந்தமும் இல்லாத சோதியாம் சிவம் மாயத் தத்துவத்தில் சக்தி பின்னமில்லாதவர். சக்தி ஐம்பூதங்களுடன் ஒருங்கே காட்சியுளவையில் மின்னற் கொடியாக அபிராமியாக அருளுகின்றாள். பட்டரின் அபிராமி அந்தாதி ஈரடியாக அங்குறள் என மிடற்றோசையில் சிவசித்தம் கைகூடியுள்ளது. ஓம் நமச்சிவாய சாரம் அங்குறள் சிவசித்தாந்த தமிழ் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

சி. யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அம்மாவிற்கு

பராசக்தி சிவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# அபிராமி அந்தாதி அங்குறள்

## காப்பு

**தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை**
**காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.**

கணபதி கட்டுதி

## நூல்

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலக முணர்வுடையோர்**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 01**
மணிபூரக மின்னற்கொடி அபிராமி விழுத்துணை

**துணையும் கொழுந்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்**
**அணையும் திரிபுர சுந்தரி ஆவ தறிந்தனமே. 02**
சூரிய சந்திர அக்கினி கண்ட தேவசக்கர அருள்

**அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு**
**மறிந்தே விழும் நரகுக் குறவாய மனிதரையே. 03**
மறை அறிந்து சரண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி**
**புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே. 04**
சிவம் சக்தி புந்தியில் பொருந்துதல்.

**பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்**
**திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே. 05**
தூல சூக்கும காரண குண்டிலினி சக்தியாக சென்னியில் பொருந்துதல்

**சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே**
**பன்னியது என்றும் உன்தன் பரமாகம பத்ததியே. 06**
சென்னியில் பரமாகமம்

**ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி தளர்விலதோர்**
**துதியுறு சேவடியாய் சிந்துர ஆனன சுந்தரியே. 07**
திருவடிப்பேறு அருளல்

**சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரை எல்லாம்**
**கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கத்தனவே. 08**
தளைகளை மலர்த்தாள்

**கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்**
**முருத்தன மூரலும் அம்மே வந்து என்முன் நிற்கவே. 09**
அம்மே வண்ணக் கண்ணனக் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை**
**அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே. 10**
என்றும் அழியாமுத்தி ஆனந்தம்

**ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்து அமுதமுமாய்**
**கானந்தம் ஆடரங்காம் எம் பிரான் முடிக் கண்ணியதே. 11**
சச்சிதானந்த வடிவுடையான்

**கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்து பத்தி**
**புண்ணியம் எது என்அம்மே புவி ஏழையும் பூத்தவளே. 12**
கண்ணியது நாமம் பத்தி புண்ணியம்

**பூத்தவளே புவனம் பதினகான்கையும் பூத்தவண்ணம்**
**மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. 13**
புவனேஸ்வரி

**வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்**
**சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே. 14**
பிராட்டி தண்ணளி

**தண்ணளிக்கு என்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்**
**பண்ணளிக்கும் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15**
பண்ணளி பைங்கிளி தண்ணளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே. 16
உள்ளொளி அளி

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தம் எல்லாம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே. 17
பதிமதி பாகத்தாள்

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே. 18
முத்தி அருளல்

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும்
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதில் வெளிநின்ற நின்திருமேனி
ஞானத்திரு

உறைகின்ற நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே. 20
மாய தத்துவ மங்கலை

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருண
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பொற்கொடியே. 21
அருளும் சக்தி பேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த**
**அடியேன் இறந்துஇங்கு இனிப்பிறவாமல்வந்து ஆண்டுகொள்ளே. 22**

முத்திப்பேறு

**கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது அன்பர்கூட்டம் தன்னை**
**கள்ளே! களிக்கும் களியே! அளியஎன் கண்மணியே!. 23**

கோலம் களி

**மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணி புனைந்த**
**பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே. 24**

ஒளிரும் பத்மபாதம் பணிதல்

**பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க**
**என்னே இனி உன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே. 25**

இம்மை வணக்கம்

**ஏத்தும் அடியவர் ஈரேழு உலகினையும் படைத்தும்**
**நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26**

படைத்தருளல்

**உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பும்**
**துடைத்தனை சுந்தரி! நின் அருள் ஏதென்று சொல்லுவதே. 27**

எல்லையில் அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்**
**செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28**
சிவலோகம் சித்தித்தல்

**சித்தியும் சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பரா**
**புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே. 29**
சித்தேசுவரி

**அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை**
**ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே. 30**
ஆட்கொண்ட ஒன்றே பல உருவே அருவே உமையவள்

**உமையும் உமை ஒரு பாகமும் ஏக உருவில் வந்திங்கு**
**அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே. 31**
ஏக உரு உமை

**ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கை**
**நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே. 32**
ஆசை அகல் நேசம்

**இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க**
**உழைக்கும்பொழுது என்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. 33**
காத்தருளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்**
**செந்தேன் மலரும் அலர் கதிர் ஞாயிறும் திங்களுமே. 34**
வானுலகம் ஞாயிறும் திங்களும் சரணம் செந்தேன் மலர் அலர் கதிர்

**திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னி வைக்க**
**வெங்கட் பணி அணைமேல் துகில்கூரும் விழுப்பொருளே. 35**
பாற்கடலில் திருமாலை இடமாகக் கொண்டு காத்தல் தொழில் செய்யும் சிவசக்தியே வைணவி

**பொருளே! பொருள் முடிக்கும் போகமோ அரும் போகம் செய்யும்**
**அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே. 36**
ஒளிவெளி அருள்

**கைக்கே அணிவது கன்னலும் பூவும்! கமலம் அன்ன**
**திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!. 37**
எண்திசையால் திகம்பரன் சேர்ப்பவள்.

**பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்**
**அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38**
பணிகண் அவள் ஆளுகை

**ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்**
**மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பாங்கில் வாணுதலே. 39**
அடியேன் இருள்நீங்கி அருள்பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சி
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே. 40
சிவத்தவப் பேறு

புண்ணியம் செய்தனமே மனமே புதுப் பூங்குவளை
பண்ணி நம் சென்னியின்மேல் பத்ம பாதம் பதிந்திடவே. 41
சென்னியில் பத்மபாதம் நன்றி

இடம்கொண்டு விம்மி இணைகொண்டு இறுதி இளகி முத்து
படம்கொண்ட அல்குல் பணிமொழி வேதப் பரிபுரையே. 42
வேதப்பரிபுரை

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43
செம்பாகத்தாள்

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
துவளேன் இனி ஒருதெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே. 44
தவளே துவளேன்

தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்து இச்சையே
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கையன்றே. 45
தொண்டு தொழுது பொறுக்கை மிண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்**
**மறுக்கும் தகைமைகள் செய்யின் யான்உன்னை வாழ்த்துவனே. 46**
வெறுக்கினும் மறுக்கினும் வாழ்த்துக.

**வாழும்படி ஒன்று கண்டுகொண்டேன்; மனத்தே ஒருவர்**
**சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47**
இடகலை பிங்கலை நடுவே குண்டலினிசுடர் ஞானம்

**சுடரும் கலைமதி துன்றும் நடைமுடிக் குன்றில் ஒன்றி**
**குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48**
முத்தி தியானம் மணிபூரகத்தில்

**குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட**
**நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே. 49**
ஏழுலகு ஏழிசையாய் நாயகி அருள்

**நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச**
**ஆய கியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50**
சகலலோக ஏகநாயகி சரணம்

**அரணம் பொருள் என்று அருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்**
**மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே. 51**
பிறப்பிறப்பில் முத்தி அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிதை**
**செய்யும் தவமுடையர்க்கு உளவாகிய சின்னங்களே. 52**
மும்மைத்துவம் இம்மைச் செல்வம்

**சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்**
**தன்னந் தனி இருப்பார்க்கு இதுபோலும் தவமில்லையே. 53**
சக்தியோகம் மேல் தவம்

**இல்லாமை சொல்லி ஒருவர்தம்பாற் சென்று இழிவுபட்டு**
**செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54**
இல்லாமை செல்லாமை தவம்

**மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது**
**உன்னா தொழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே. 55**
மின்னாயிரம் மெய் அருள்

**ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்**
**அன்று ஆலிலையில் துயில்கின்ற பெம்மானும் என்ஐயனுமே. 56**
யுகமுடிவு வெள்ளத்தில் ஆலிலையில் துயின்ற சிவனும் திருமாலும் அறியும் துண்ணிய உண்மை பராசக்தி.

**ஐயன் அளந்தபடி இருநாழிகொண்டு அண்டமெல்லாம்**
**மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே. 57**
ஐயன் அளந்தபடி அண்டமெல்லாம் மெய் அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருணாம் புயத்தும் என்சித்த அம்புயத்தும் அமர்ந்திருக்கும்**
**சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே. 58**
சித்தாம்புயம் அருளும் பயம் சரணாம்புயம்தவமுனியே.

**தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே**
**பஞ்சஞ்சு மெல்அடியார் அடியார் பெற்ற பாலரையே. 59**
தவநெறியே தஞ்சம்

**பாலினும் சொல்இனியாய்! பனிமாமலர்ப் பாதம் வைக்க**
**நாலினும் சாலநன்றோ? அடியேன் முடை நாய்த் தலையே. 60**
சீவன் முத்தர் அருள்

**நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து**
**தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கைச்சியே. 61**
பதிபதார்த்தம் நயக்கும் தாய்

**தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத**
**செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே. 62**
எப்போதும் என் சிந்தை உன் தண்ணளிகாட்சியே.

**தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல் கதிக்கு**
**வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே. 63**
முன்செல்கதி பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீணே பலிகவர் தெய்வங்கள்பால் சென்று மிக்க அன்பு**
**காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே. 64**
அருள் ஒளி பிரகாசம்

**ககனமும் வானும் புவனமும் காண விற்காமன் அங்க**
**மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே. 65**
வல்லபை அருள் சரவணன்

**வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின்மலரடிச் செம்**
**சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே. 66**
திருநாமங்களே தோத்திரம்

**தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு**
**பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பார் எங்குமே. 67**
மின் நின் தொழல் தோத்திரம்

**பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்**
**சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே! 68**
யாதுமாகி அருளல்

**தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா**
**கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 69**
இம்மை அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்ப அடவியில்
பெண்களில் தோன்றிய எம் பெருமாட்டிதன் பேரழகே. 70
கண்களி தண்ணளி

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
இழவுற்று நின்ற நெஞ்சே! இரங்கேல் உனக்கு என்குறையே. 71
அருமறைகள் நிறை நெஞ்சு

என்குறைதீர நின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
தன்குறைதீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே. 72
சிவகங்கைத் தாமரை அருள் பரமுத்தி

தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தனுக்கரும்பு
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73
திரிபுரை நாமம் துதி

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
சயனம் பொருந்து தபனியக் காவினில் தங்குவரே. 74
தேவலோகம் பேறு அருளல்.

தங்கு உவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர் இன்றி
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே. 75
சொர்க்கபோக பரமுத்தி அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறித்தேன் மனத்தில் நின்கோலமெல்லாம் நின் குறிப்பறிந்து**
**மறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே. 76**
மனத்தில் நின் கோலமெல்லாம் குறித்தேன்.

**பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்**
**செயிர்அவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே. 77**
நான்மறைசேர் நாமம் செப்புக.

**செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்**
**அப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே. 78**
மெய்த்தியானம்

**விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு; அவ்வழி கிடக்க**
**குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டு இனியே. 79**
தவத்துணை அவத்துணை அறுக்கும்

**கூட்டியவா என்னைத் தன் அடியாரிற் கொடியவினை**
**ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80**
அருள் வெள்ளம் நடம்

**அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்**
**பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே. 81**
அறிவு ஒன்றிலேன் நின்கருணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அளிஆர் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்**
**வெளியாய்விடின் எங்ஙனே மறப்பேன் நின்விரகினையே. 82**
எல்லா அண்டங்ளும் உள்ளொளியாக நின்று அந்தக்கரண
வானில்ஆனந்த வெள்ளமாய் பூரிக்க பரவெளியாகும் அருள்.

**வீரவும் புதுமலர்இட்டு நின்பாத வீரைக்கமலம்**
**உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83**
அம்மை அருள் இந்திரலோகம்

**உடையானை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிமதிச் செம்**
**படையாளை உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே. 84**
செம்பட்டுடையாள் பரமருள்

**பார்க்கும் திசைதொறும் பாசஅங்குசமும் பனிச் சிறைவண்டு**
**வார்க் குங்கம முலையும் முலைமேல் முத்துமாலையுமே. 85**
தவக்காட்சி பார்க்கும் திசைதொறும்.

**மால்அயன் தேட மறைதேட வானவர்தேட நின்ற**
**பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86**
அறியவொண்ணா தண்ணளி

**மொழிக்கும் நினைவுக்கும் எட்டாதநின் திருமூர்த்தி என்தன்**
**பழிக்கும்படி ஒருபாகம் கொண்டு ஆளும் பராபரையே. 87**
வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டா திருமூர்த்தம் கருணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமென்று உனைஅடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
சிரமொன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே. 88
பரம் சரண்

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்க
மறக்கும் பொழுது என்முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே. 89
சிவத்துரியம் அருளல்

வருந்தா வகை என் மனத் தாமரையினில் வந்து புகுந்து
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே. 90
வருந்தா மனத்தாமரை மருந்து

மெல்லிய நுண்ணிடை மின் அனையாளை விரிசடையோன்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே. 91
அடியவர் சீவன் சிவனாவர்

பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி உன்தன்
முதற்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே! 92
பதத்தே பாதம்

நகையே இஃது இந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93
ஞாலம் மிகை நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி மெய்புளகம்**
**தரும் பித்தராவர் என்றால் அபிராமி சமயம் நன்றே. 94**
பக்திப் பரவசம்

**நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது**
**குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே. 95**
நன்றே தீதே அருட்கருணை

**கோமளவல்லியை அல்லி யந்தாமரைக் கோயில் வைகும்**
**ஆமளவும் தொழுவார் எழுபார்க்கும் ஆதிபரே. 96**
எழுதரிய அம்மை தாள் மேன் ஏழுலகல்

**ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங் கோன்**
**சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97**
எண்ணிலர் போற்றுவர் தையலையே.

**தைவந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரர்க்கு**
**பொய்வந்த நெஞ்சிற் புக அறியா மடப் பூங்குயிலே. 98**
மெய்நெஞ்சில் தஞ்சம்

**குயிலாய் இருக்கும் கடம்ப அடவியிடைக் கோலஇயல்**
**கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே. 99**
குயில் மயில் வெயில் கமலத்தில் அன்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கைவல்லி**
**உழையப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே.100**
பிரணவஞான ஒளி

## நூற்பயன்

**ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்**
**சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.**
தாயே அண்டமெல்லாம் துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org